**இனிமையான குழந்தைகளே, பாபாவிடமிருந்து ஜீவன் முக்திக்கான ஆஸ்தியைப் பெறுவதற்கு மாயையின் அனைத்து பந்தனங்களிலிருந்தும் விடுபடுங்கள். இங்கே ஜீவன்முக்தி அடைபவர்களே, அங்கே ஜீவன்முக்தி பதவியை அடைகிறார்கள்.**

கேள்வி: இந்த ஞானத்தின் விதை அழியாதது - எப்படி?

பதில்: இந்த ஞானத்தின் மூலம் சூரியவம்சம் மற்றும் சந்திர வம்சத்தின் ராஜதானி ஸ்தாபனை ஆகிறது. அந்த ராஜதானி மிகப் பெரியதாகும். ஒருமுறை ஞானம் பெற்ற ஆத்மாக்கள் கூட, இடையே ஞானத்தை விட்டுச் சென்றாலும், பிறகு கடைசியில் வந்துவிடுவார்கள். ஏனெனில் அவர்களும் ராஜதானியில் வரத்தான் வேண்டும். யாருக்குள் ஞானத்தின் விதை கொஞ்சம் விழுந்திருக்கிறதோ, அவர்கள் வந்து விடுவார்கள். இந்த விசயம் தான் ஞானத்தை அழியாதது என்று உறுதி செய்கிறது.

பாடல்: கள்ளங்கபடமற்றவர் தனிப்பட்டவர்..............

ஓம் சாந்தி. குழந்தைகள் இப்போது தன்னுடைய பிராணேஸ்வரின் (உயிர் தரக்கூடியவரின்) முன்னால் அமர்ந்துள்ளீர்கள். மேலும் இந்த எல்லைக்கப்பாற்பட்ட எஜமானன் கள்ளங்கபட மற்றவரிடமிருந்து நமக்கு மீண்டும் சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று நல்ல முறையில் தெரிந்துள்ளீர்கள். புத்தி அங்கே போய்விடுகிறது. தந்தை மூலமாகத் தான் நாம் தந்தையின் வீட்டுக்குச் செல்கிறோம். பிரியதர்ஷன் பிரியதர்ஷினியை அழைக்க வருவதைப் போல பாபா நம்மை அழைக்க வந்திருக்கிறார். ஒரு பிரியதர்ஷன் வந்து அனைத்து பிரியதர்ஷினிகளையும் மலர்களாக ஆக்குகின்றார். அவருடைய பெயரே பதீத பாவனன் ஆகும். ஆனால் குழந்தைகள் தந்தையை மறந்து விடுகின்றனர். இப்படி மறப்பது கூட நாடகத்தில் அடங்கி இருக்கிறது. பாபா வந்து அனைத்து ரகசியங்களையும் புரிய வைக்கிறார். அதிர்ஷ்ட நட்சத்திரங்களாகிய உங்கள் பதவி பாபாவை விட உயர்ந்தது. எப்படி பாபா பிரம்மாண்டத்தின் எஜமானரோ, அதுபோல நீங்களும் பிரம்மாண்டத்தின் எஜமானர் ஆவீர்கள். நீங்களும் தந்தை யாகிய என் கூடவே பிரம்மாண்டத்தில் இருந்தீர்கள். பிறகு குழந்தைகளாகிய நீங்கள் நடிக்க வரத் தான் வேண்டி இருக்கிறது. நாம் வைகுண்டநாதர் ஆவதற்காக திரிலோகநாதரிடம் வந்திருக்கிறோம் என்று உங்களுக்குத் தெரியும். பாபா சொல்கிறார், குழந்தைகளே, நீங்களும் இந்த நேரத்தில் திரிலோகநாதர் ஆவீர்கள், ஆக நானும் திரிலோகிநாதர் தான். பிறகு சத்யுகம் வரும் போது அதன் தலைவனாக நீங்கள் ஆகிறீர்களே தவிர நான் ஆவதில்லை. நான் வருவதே ஆத்மாக்களாகிய உங்களை இராவணனின் துக்கங்களிலிருந்து விடுவிப்பதற்காகத் தான். இராவணனிடமிருந்து உங்களுக்கு அதிக துக்கம் கிடைத்திருக்கிறது. நாடகத்தையோ குழந்தைகள் புரிந்து கொண்டு விட்டனர். இதற்கு நான்கு யுகங்கள் கிடையாது, 5 யுகங்கள் ஆகும். நான்கும் பெரிய யுகங்களாகும், இந்த சங்கம யுகம் லீப் யுகமாகும். இந்த ஞானமும் குழந்தைகளின் கவனத்தில் இருக்க வேண்டும். ஏனெனில் ஞானக்கடலின் குழந்தைகளாக நீங்கள் ஆகியுள்ளீர்கள். பக்தி மார்க்கத்தில் நீங்கள் ஞானக்கடல், அமைதிக்கடல் என்று அவருடைய மகிமைப் பாடுகிறீர்கள். இந்த மகிமை பிறகு

வைகுண்ட நாதருக்கு ஏற்படுவ தில்லை. அவர் தான் பிறகு சர்வகுணங்கள் நிறைந்தவர், 16 கலைகள் சம்பூர்ணமானவர்........ என்று சொல்லப்படுகிறார். இந்த கலியுகத்தில் அப்படி யாரும் இருப்பதில்லை. ஆக கண்டிப்பாக அப்படி ஆக்குபவர் வந்திருக்க வேண்டும். சொர்க்கத்தின் எஜமானராக நீங்கள் மட்டும் தான் ஆகின்றீர்கள். சூட்சும வதனவாசி தேவதைகளாகிய பிரம்மா, விஷ்ணு, சங்கரையும் இல்லற மார்க்கத்தைக் காட்டுவதற்காக தம்பதிகளாகக் காட்டுகின்றனர். ஆக சொர்க்கம் கூட இங்கே தான் ஏற்படுகிறது. பிராமண வர்ணத்திலிருந்து நீங்கள் தேவதா வர்ணத்திற்கு வருவீர்கள். பிறகு க்ஷத்திரிய வர்ணத்தில் வருவீர்கள்.

புத்திசாலிக் குழந்தைகள் நல்ல முறையில் படிப்பில் கவனம் கொடுக்கின்றனர். அஞ்ஞான காலத்திலும் கூட குழந்தை பிறந்து விட்டால் வாரிசு வந்து விட்டதாக புரிந்து கொள்கின்றனர். நீங்கள் கூட மம்மா-பாபா என்று சொல்கிறீர்கள் என்றால் வாரிசுகள் தான் அல்லவா! காந்திஜியை பாபுஜி (தந்தை) என்று அழைப்பதைப் போல பாரதத்தில் தாய்-தந்தை என்று பலரை அழைக்கின்றனர். வயதானவரை பிதாஜி என்று அழைக்கின்றனர். வெறும் பேச்சுக்கு சொல்லி விடுகின்றனர். இவரோ (பாபா) அனைவருக்கும் பாபுஜியாக (தந்தையாக) இருக்கின்றார். பிராணேஸ்வரர் அதாவது அனைத்து ஆத்மாக்களுக்கும் ஈஸ்வரர் தந்தை ஆவார். தந்தை என்று சொல்வதன் மூலம் ஆஸ்தியின் மகிழ்ச்சி மனதில் ஏற்படுகிறது. குழந்தைகளாகிய உங்களுக்கு வரிசைக்கிரமமாக முயற்சியின் ஆதாரத்தில் மனதில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. எல்லைக்கப்பாற் பட்ட தந்தையே வந்து இராஜயோகம் கற்பிக்கிறார். பிரம்மா, விஷ்ணு, சங்கரர் இராஜயோகம் கற்பிக்க முடியாது. இது பகவானுடைய மகாவாக்கியம் ஆகும். தேவி தேவதைகள் தெய்வீக குணமுடைய மனிதர்களாவர். பரமேஸ்வரன் என்றால் இறை தந்தை ஆவார். பாரதத்தில் கூட சொல்கின்றனர்--பரமபிதா பரமாத்மா, சுப்ரீம் காட் பாதர் (நன்ல்ழ்ங்ம்ங் ஏர்க் எஹற்ட்ங்ழ்). ஆக புத்தி மேலே போய்விடுகிறது. ஏனெனில் தந்தை மேலே இருக்கிறார் என்று தெரிந்திருக் கிறார்கள். நாம் கூட அங்கே வசிக்கக்கூடியவர்கள் என்று குழந்தைகள் இப்போது புரிந்திருக் கிறீர்கள். இப்போது நாம் அந்த பிராணேஸ்வரருக்கு முன்னால் அமர்ந்துள்ளோம். பாபா முன்னால் அமர்ந்து நினைவைக் கொடுக்கிறார் என்றால் இவர் எந்த சாதுவோ-மஹாத்மாவோ இல்லை என்று உறுதிப்படுத்துகிறார். நாம் தாய்-தந்தையின் முன்பு அமர்ந்திருக்கிறோம். ஏன் அவர்களுடையவர் ஆகியுள்ளோம்? தாய்-தந்தையிடமிருந்து எதிர்கால 21 பிறவிகளுக்கு ஆஸ்தி அடைவதற் காக, நிச்சயம் (நம்பிக்கை) இல்லை என்றால் ஏன் அமர்ந்துள்ளீர்கள்? அதற்குக் காரணம் வேண்டும். தெரியாமல் யாரும் யாருக்கு முன்பும் அமர முடியாது. உலகத்தில் ஒருவருக்கொருவர் அறிமுகம் ஏற்படுகிறது, இவர் சன்னியாசி, இவர் கவர்னர்............இங்கே இந்த விசயமோ குப்தமாக (ரகசியமாக) உள்ளது. பரமபிதா பரமாத்மா பரந்தாமத்தில் வசிக்கக் கூடியவர் என்று எப்போது தெரிந்து கொள்கிறார்களோ, அப்போது அங்கே சர்வ வியாபி என்ற விசயமே எழாது. ஓ, இறை! தந்தையே என்று ஆத்மா நினைவு செய்கிறது. தானே பரமாத்மா ஆகிவிடுகின்ற போது பிறகு எதற்கு அழைக்கிறார்கள்! புரிந்து கொள்வதற்கு மிகச் சிறிய விசயம் தான். ஆனால் மாயை அவர்களைப் புரிந்து கொள்ளாத படிக்கு ஆக்கிவிடுகிறது. வாய் மூலமாக சொல்லும் வார்த்தைகளில் கூட நம்பிக்கை ஏற்படுவதில்லை. மாயை சந்தேக புத்தி உடையவராக ஆக்கிவிடுகிறது. ஓ, இறை! தந்தையே என்று அழைக்கவும்

செய்கிறார்கள். பிறகு நாங்கள் தான் தந்தை என்றும் சொல்லி விடுகிறார்கள். பிறகு ஏன் அழைக்கிறார்கள்? தந்தை என்ற வர்த்தையை குழந்தைகள் தான் சொல்வார்கள். அந்த ஒருவரைத் தான் நினைவு செய்ய வேண்டும். இப்போது நீங்கள் முன்னால் அமர்ந்துள்ளீர்கள். நாம் பரமபிதா பரமாத்மா வினுடையவர் களாக ஆகியுள்ளோம், என்பதை தெரிந்துள்ளீர்கள். அவரிடமிருந்து ஆஸ்தி எடுக்கின்றீர்கள். இப்போது மறக்க மாட்டீர்கள் அல்லவா.

பாபா கூறுகின்றார்: குழந்தைகளே, அசரீரி ஆகுங்கள், தூய்மையாகுங்கள். நான் உங்களை அழைத்துச் செல்ல வந்திருக்கிறேன். தேவதைகளுக்கு முன்னால், நான் குணமற்றவன், என்னிடத்தில் குணம் ஏதும் இல்லை, என்றும் பாடுகிறார்கள். தேவதைகளின் மகிமை பாடு கிறார்கள். தன்னை கீழானவர்கள் பாவிகளாக புரிந்து கொள்கிறார்கள். முன்பு கண்டிப்பாக சம்பூரண விகாரமற்ற உலகமாக இருந்தது. அதனை சொர்க்கம் சிவாலயம், என்று சொல்லப் பட்டது. சிவபாபாவால் ஸ்தாபனை செய்யப்பட்ட சொர்க்கமாகும். சொர்க்கம் இருக்கிறது, என்பதை பாரதவாசிகள் தெரிந்திருக்கிறார்கள். ஆனால் பாரதம் சொர்க்கமாக இருந்தது, ஆதி சனாதன தேவி- தேவதைகள் இராஜ்யம் செய்திருந்தார்கள், என்பதை மறந்து இருக்கிறார்கள். யாராவது இறந்தார்கள் என்றால், சொர்க்க பதவி அடைந்து விட்டார் என்று சொல்கிறார்கள். சொர்க்கம் சத்யுகத்தில் தான் இருக்கிறது. கலியுகத்திலா இருக்கிறது. செய்திதாளில் இன்னார் சொர்க்க பதவி அடைந்தார் என்று எழுதினால், சொர்க்கம் எங்கே இருக்கிறது என்று நீங்கள் கேளுங்கள். பரந்தாமத்தில் பரமாத்மாவிடம் சென்றிருக்கிறார்கள், அது தான் சொர்க்கம் என்று புரிந்து கொள்கிறார்கள். இல்லையென்றால் நிர்வாணதாமம் சென்றுவிட்டார் அல்லது ஜோதி ஜோதியோடு ஐக்கியமாகி விட்டது, என்று கூறுகிறார்கள். வார்த்தைகளில் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. அதனை (பரந்தாமத்தை) பிரம்ம மகாதத்துவம், என்று சொல்லப்படு கிறது. இது ஆகாய தத்துவமாகும். இதை மகாதத்துவம் என்று சொல்ல மாட்டார்கள். மகாதத்துவம் என்பது அதுவாகும்--பிரம்ம மகாதத்துவம், பிரம்மாண்டம், அங்கே தான் ஆத்மாக் களாகிய நாம் முட்டை உருவில் இருக்கிறோம். பாபாவும் கூட அங்கே தான் இருக்கிறார். அதனை பரந்தாமம் என்று சொல்லப்படுகிறது. மற்றபடி பிரம்மத்தில் யாரும் ஐக்கியமாக முடியாது. முன்னால் அமர்ந்திருக்கும் பொழுது குழந்தைகளுக்கு நிறைய விசயங்கள் புரியவைக்கப்படுகிறது. பக்தர்கள் பகவானை தேடிக்கொண்டே இருக்கிறார்கள்.

பக்திமார்க்கத்தில் அனைவரையும் விட அதிக பக்தி யார் செய்கிறார்கள், என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். கண்டிப்பாக யார் முதலில் பூஜிக்கத்தக்கவர்களாக இருந்தார்களோ, அவர்கள் தான் பிறகு முதலில் பூஜாரி பக்தர்களாக ஆகிறார்கள். இதை குழந்தைகளாகிய நீங்கள் மட்டும் தான் தெரிந்துள்ளீர்கள். நீங்களே பூஜிக்கத் தக்கவர், நீங்களே பூஜாரி, என்றும் பாடுகிறார்கள். ஆனால் பரமாத்மா தந்தை அவரே தான் பூஜிக்கத் தக்கவராகவும்-பூஜாரியாகவும் ஆகிறார், என்று அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். இது தவறாகும். பாபா வந்து குழந்தைகளை உயர்ந்த புகழுக்கு தகுதியானவர் களாக ஆக்குகிறார். ஆனால் அனைவருக்கும் சொர்க்கத்தின் ஜீவன் முக்தி கிடைக்காது. எப்போது மாயையின் பந்தனங்களிலிருந்து விடுபடுவீர்களோ, அப்போது தான் ஜீவன்முக்தி கிடைக்கும். ஜீவன்முக்தி என்றால் மாயையின் பந்தனத்திலிருந்து

விடுபட்டிருப்பதாகும். அனைவரும் சத்யுகத்திற்கு வருவார்கள் என்பது கிடையாது. யார் இராஜ யோகம் கற்றுக் கொள்கிறார்களோ, அவர்கள் தான் சத்யுகத்திற்கு வருவார்கள். ஞான மார்க்கத்தில் எவ்வளவு பந்தனங்களிலிருந்து விடுவிக்க வேண்டியிருக்கிறது! மீராவிற்கு ஒன்றும் இவ்வளவு பந்தனங்கள் இல்லை. கிருஷ்ணரை சந்திக்க வேண்டும் ஆகையால் தூய்மையாக இருப்பேன், என்று மட்டும் தான் சொன்னார். நீங்களோ கிருஷ்ணபுரிக்கு செல்ல வேண்டும். அந்த மீரா பக்த சிரோன்மணியாக இருந்தார். நீங்கள், எந்த வெற்றிமாலை பூஜிக்கப் படுகிறதோ அந்த வெற்றி மாலையின் சிரோன்மணி ஆவீர்கள். பக்தர்களின் மாலை ஒன்றும் பூஜிக்கப்படுவதில்லை. யார் பாரதத்தை சொர்க்கமாக மாற்றுகிறார்களோ, அவர்களின் மாலை பூஜிக்கப் படுகிறது. பக்தர்கள் குழந்தைகளாகிய உங்களுடைய மாலையை பூஜிக்கிறார்கள். முதலில் ருத்ர மாலையாகும். பிறகு விஷ்ணுவின் மாலையாக ஆகிறது. யாருடைய மாலை உருவாக்கப்பட்டிருக்கிறது, என்பதை யாரும் தெரிந்திருக்கவில்லை. வெறுமனே மாலையை உருட்டிக் கொண்டே இருக்கின்றார்கள். இப்போது நீங்கள் பக்தர்களின் மாலையை ஒன்றும் உருட்ட மாட்டீர்கள். பக்தர்கள் குழந்தைகளாகிய உங்களுடைய மாலையை உருட்டுகிறார்கள். நம்முடைய வெற்றி மாலை உருவாகிக் கொண்டிருக்கிறது, என்பதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். பிறகு நாமே தான் பூஜாரிகளாகி மாலையை உருட்டுவோம். நீங்கள் இராஜ்ஜியமும் செய்கிறீர் கள் பிறகு எல்லோருக்கும் முன்னால் சென்று முதலில் நீங்கள் தான் மாலையை உருட்டுவீர் கள். பிறகு உங்களிடமிருந்து தான் பக்தியை மற்றவர்களும் கற்றுக் கொள்வார்கள். நீங்கள் உலகத்தை சொர்க்கமாக்குகிறீர்கள்.

பாபா இராஜயோகம் கற்றுக் கொடுக்கின்றார்--அதனுடைய பெயர் தான் கீதை, என்று வைக்கப் பட்டுள்ளது. தர்ம சாஸ்திரத்தின் பெயர் வேண்டும் அல்லவா. ஞானம் மறைந்து விடுகிறது, ஆனால் சாஸ்திரம் உருவாகும் அல்லவா. சாஸ்திரத்தை உருவாக்கி அதற்கு ஸ்ரீமத் பகவத் கீதை, என்று பெயர் வைத்துள்ளார்கள். பக்தி மார்க்கத்திற்காக கீதை உருவாக்குகிறார்கள். அந்த கீதை ஞான மார்க்கத்திற்காக கிடையாது. எவ்வளவு கீதைகள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்! உங்களுக்கு இராஜயோகம் கற்றுக் கொடுக்கின்றோம், என்று ஒருபோதும் சொல்வதில்லை. பகவான் இராஜயோகம் கற்றுக் கொடுத்து விட்டு சென்றிருந்தார், என்று சொல்வார்கள். பிறகு அவருடைய சாஸ்திரத்தை அமர்ந்து படிக்கிறார்கள். இப்போது பகவானின் மூலம் நேரடியாக அதே கீதையை கேட்டு நாம் சொர்க்கத்திற்கு எஜமானர்களாக ஆகிறோம். நான் குழந்தைகளாகிய உங்களுக்கு ஒரே ஒரு முறைதான் இராஜயோகம் கற்றுக் கொடுத்து இராஜாவிற்கெல்லாம் இராஜாவாக ஆக்குவதற்காக வருகிறேன், என்று பாபா கூறுகின்றார். எதுவரை சத்கதியை கொடுக்கக் கூடியவர் வரவில்லையோ அதுவரை பக்தி மார்க்கத்தின் மகிமை கண்டிப்பாக நடக்கும். யார் கல்பத்திற்கு முன் வந்திருப்பார்களோ, அவர்கள் தான் வந்து இதை கேட்பார்கள். இன்னும் நிறைய பேர்கள் வரக் கூடியவர்கள் இருக்கிறார்கள். சூரியவம்ச-சந்திரவம்ச இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது, என்றால் எவ்வளவு பேர்கள் வருவார்கள்! ஆகவே ஞானத்தில் வினாசம் ஏற்படுவதில்லை. பணக்கார பிரஜைகள், சாதாரண பிரஜைகள், வேலைக்காரர்கள் போன்றவர்களும் வேண்டும் அல்லவா. எவ்வளவு பெரிய இராஜ்யம் ஸ்தாபனை ஆகிறது! சத்யுக இராஜ்யம் எப்படி ஸ்தாபனை ஆகிறது,

என்பது மனிதர் களுக்கு கொஞ்சமாவது தெரியுமா என்ன! ஒருவேளை இதைத் தெரிந்து கொண்டால் பிறருக்கும் சொல்வார்கள். தந்தையையே மறந்து விட்டார்கள். நிராகார சிவபகவானுடைய மகாவாக்கியம் என்பதற்கு பதிலாக கிருஷ்ண பகவானுடைய மகாவாக்கியம், என்று எழுதி விட்டார்கள். சிவஜெயந்திக்கு பிறகு உடனேயே கிருஷ்ண ஜெயந்தி வருகிறது. அந்த கிருஷ்ணர் வைகுண்டத்தின் தலைவன் ஆவார். இவர் (சிவபாபா) அமர்ந்து உங்களை வைகுண்ட நாதர் களாக ஆக்குகிறார். பிறகு கிருஷ்ணரை துவாபர யுகத்திற்கு கொண்டு சென்று விட்டார்கள். பாரதத்தின் ஞானம் எவ்வளவு குழம்பியுள்ளது!

இப்போது நல்ல விதத்தில் தாரணை செய்து ஞானம் நிறைந்தவர்களாக ஆக வேண்டும். நாம் எவ்வளவு மதிப்பெண்களோடு தேர்ச்சி பெறுகிறோம், என்று பார்க்க வேண்டும். இப்போது தேர்ச்சி பெற்றால் கல்பம்-கல்பத்திற்கு தேர்ச்சி பெறுவீர்கள். குடும்ப விவகாரங்களில் இருந்து கொண்டே படிக்க வேண்டும். வயதானவர்கள், ஆண்-பெண், மருமகள் போன்ற அனைவரும் வந்து இப்படி படிப்பது என்பது ஒருபோதும் நடப்பதில்லை. சாஸ்திரங்களைக் கூட இப்படி படிப்பதில்லை. நீங்கள் சாஸ்திரங்கள் படிக்கக் கூடாது, என்று மாதர்களுக்கு சொல்கிறார்கள். ஆண்கள் தான் பண்டிதர்களாக ஆகி படிக்கிறார்கள். இங்கே பாருங்கள் யார்-யாரெல்லாம் படிக்கிறார்கள்! எப்படி- எப்படிபட்ட வயதான மாதர்கள் வருகிறார்கள்! அதிசயமாக இருக்கிறது அல்லவா. குடும்ப விவகாரங்களில் இருந்து கொண்டே தாமரை மலருக்குச் சமமாக தூய்மை யாக இருந்து இராஜயோகம் கற்க வேண்டும். இறை தந்தையின் மாணவர்களாக ஆக வேண்டும். இதனுடைய பெயரே, ஈஸ்வரிய பிரம்மா குமார-குமாரிகளின் கல்லூரியாகும். ஈஸ்வரன் பிரம்மாவின் மூலம் படிப்பித்துக் கொண்டிருக்கிறார். பிரம்மா, விஷ்ணுவின் நாபிக்

கமலத்திலிருந்து வரவில்லை இதனை பரமபிதா பரமாத்மாவின் நாபியிலிருந்து, என்று தான் சொல்லலாம். விதை ரூபமாக இருப்பது சிவபாபா அல்லவா! அவரிடமிருந்து பிரம்மா, விஷ்ணு, சங்கர் வந்தார்கள். மூவரின் அர்த்தங்களே தனித்-தனியானதாகும். இப்போது குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துள்ளீர்கள்--எப்போதும் விஷ்ணுவுக்கு லஷ்மியை கொடுக்கிறார்கள். நரன்-நாராயணனின் கோவில் இருக்கிறது என்றால் அவருக்கும் கூட சதுர் புஜங்களோடு உருவாக்கு கிறார்கள். நாராயணன் இருந்தார் என்றால் அவருடன் லஷ்மி கண்டிப்பாக இருப்பார்கள். நரன் (மனிதன்)--நாராயணன், நாரி--லஷ்மி ஆவார். நரன்-நாராயணனுக்கு 4 புஜங்களை காட்டுகிறார் கள். நாராயணன் தனியாக, லஷ்மி தனியாக இருந்தால் இரண்டு-இரண்டு புஜங்கள் கொடுக்க வேண்டும். அப்படி விதிப்படி கோவில் உருவாக்க வேண்டும். ஆனால் அப்பாவிகள் நரன்-நாராயணனுடைய கோவி-ன் மூலம் எதுவும் புரிந்து கொள்வதில்லை. நரன்-நாராயணனோடு லஷ்மியையும் காட்டுகிறார்கள். தீபாவளியில் மகாலஷ்மிக்கு பூஜை செய்கிறார்கள். மாதர் களுக்கு எவ்வளவு மகிமை இருக்கிறது! ஜெகதம்பாவிற்கு அதிக மகிமை இருக்கிறது. அம்பாள் மிகவும் இனிமையாக உணரப்படுகிறார், ஏனென்றால் குமாரி ஆவார். இவர் அதர் குமாரி (திருமணம் ஆனவள்) ஆவார். ஆக குமாரிகளுக்கு பாரதத்தில் நிறைய மதிப்பு இருக்கிறது. ஆனால் மகத்துவத்தை தெரிந்திருக்க வில்லை. ஜெகதம்பாவிற்கு அதிக மதிப்பு இருக்கிறது. பாபாவுக்கு அவ்வளவு இல்லை.

பாபா வந்து மாதர்களை உயர்த்துகிறார். ஆகவே தைரியசாலி ஆக வேண்டும். சிங்கத்தின் மீது சவாரி செய்ய வேண்டும். கொடுமைகள் நடக்கும். ஆனால் பாபாவுடையவர்கள் ஆகியுள்ளீர்கள் எனும்போது, பூமியே பிளந்தாலும் தர்மத்தை விடக்கூடாது. தூய்மையாக ஆகி கண்டிப்பாக உயர்ந்த பதவி அடைய வேண்டும். மீரா கூட தூய்மை ஆனார் அல்லவா. பாபா குமாரிகளுக்கு சொல்கிறார்--நாங்கள் தூய்மையாகி வைகுண்டத்தின் எஜமானர்களாக ஆக வேண்டும், என்று சொல்லுங்கள். நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய்க் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) உண்மையான வாரிசாக ஆக புத்திசாலி ஆக வேண்டும், படிப்பை நல்ல முறையில் தாரணை செய்து ஞானம் நிறைந்தவர்களாக ஆக வேண்டும். பாபாவிற்கு சமமாக மகிமைக்குதகுதியானவர்களாக ஆக வேண்டும்.

(2) வெற்றி மாலையில் சிரோண்மணி (தலையானவர்) ஆவதற்காக மாயையின் பந்தனங்களை துண்டித்துக் கொண்டே செல்ல வேண்டும். மிக-மிக தைரியசாலியாக ஆகி கண்டிப்பாக தூய்மை ஆக வேண்டும்.

வரதானம் : ஆசைகள் என்ற கானல் நீருக்குப் பின்னால் ஓடுவதற்கு பதிலாக உண்மையான வருமானத்தை சேமிக்கக் கூடிய இச்சா மாத்திரம் அவித்யா ஆகுக.

நமது பெயரில் லாட்டரி விழுந்தால் நாம் அந்தப் பணத்தை யக்ஞத்தில் ஈடுபடுத்தலாம் என்று குழந்தைகள் அநேகர் நினைக்கிறார்கள். ஆனால் அத்தகைய பணத்தை யக்ஞத்தில் ஈடுபடுத்த முடியாது. அநேக தடவை இச்சை தனக்கு உள்ளது மற்றும் லாட்டரி கிடைத்தாலோ சேவை செய்வோம் எனச் சொல்கின்றனர். ஆனால் இப்போதைய கோடீஸ்வரர் ஆவது என்றால் சதா காலத்திற்கும் கோடிகளை இழப்பதாகும். இச்சைகளின் பின்னால் ஓடுவதோ கானல் நீருக்குப் பின்னால் போவது போன்றதாகும். அதனால் உண்மையான வருமானத்தை சேமியுங்கள். எல்லைக்குட்பட்ட இச்சா மாத்திரம் அவித்யா (ஆசை பற்றி அறியாதவராக) ஆகுங்கள்.

சுலோகன்: விக்னத்தை, விக்னத்திற்கு பதிலாக விளையாட்டு எனப் புரிந்து கொண்டு நடப்பீர்களானால் விளையாட்டாக, சிரித்துக் கொண்டு, பாடிக் கொண்டு கடந்து சென்று விடுவீர்கள்.